5th February 1963]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பாலக்கோடு ஆஸ்பத்திரிக்கு ஒரு லேடி டாக்டரை நியமிக்கவேண்டுமென்று பல முறை அரசாங்கத்திற்குத் தெரியபடுத்தியும், சென்ற ஐந்தாண்டுகளாக லேடி டாக்டர் நியமிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பாலக்கோடு ஆஸ்பத்திரியில் இப்பொழுது 'பெட் ஸ்ட்ரெங்த்' கம்மியாக இருக்கிறது. அங்கு ஏற்கனவே ஒரு ஆண் டாக்டர் இருக்கிறார். இந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் தொடர்ந்து நடத்துவதா, அல்லது பஞ்சாயத்தினிடம் ஒப்படைப்பதா என்பது பரிசீலனையில் இருப்பதால் லேடி டாக்டரை தற்சமயம் நியமிப்பதற்கில்லை.

Government Hospital (Harur)

* 69 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of beds in the Government Hospital at Harur in Salem district; and

(*b*) if so, when?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(*a*) No.

(*b*) Does not arise.

Water Pollution (prevention)

70 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any comprehensive programme is under consideration for the control of water pollution; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(*a*) No.

(*b*) The question does not arise.

ஜவ்வரிசி உற்பத்தி சாலைகள், சேலம்

* 71 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஜவ்வரிசி (sago) உற்பத்தி ஸ்தாபனங்கள் உள்ளன?

(இ) இந்தத் தொழிலுக்கு எத்தனை ஆண்டுகள் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சேலம் மாவட்டத்தில் 200 ஜவ்வரிசி உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) இந்தத் தொழிலுக்கு 1—1—1951 முதல் ஒன்பது ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

[5th February 1963

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசித் தொழிலுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதுகாப்பு நீக்கப்பட்டு விட்டது. ஆனால், வெளிநாடுகளிலிருந்து ஜவ்வரிசி இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், இதற்குப் போதிய பாதுகாப்பு இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஜவ்வரிசி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் பக்கத்தில் சகிக்க முடியாத ஒரே நாற்ற மான நிலைமை இருக்கிறது. இதனால் அந்தப் பக்கங்களில் உள்ள மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படுகிறதா என்று சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இது சுகாதார அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசிக்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான அவசியம் இப்பொழுது ஒன்றுமில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், உள் நாட்டிலேயே சாதாரணமாக நல்ல முறையில் ஜவ்வரிசி விற்பனை ஆகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

Dharmapuri panchayat

*72 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the reason for deferring the proposal for the conversion of Dharmapuri Panchayat into a municipality after the publication of the notification?

The Hon. Sri S. M. A. MAJID : The question whether or not the Dharmapuri Panchayat among others should be converted into a Municipality in the present national emergency is under the consideration of the Government.

தற்போதுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக, தர்மபுரி பஞ்சாயத்தையும், மற்ற பஞ்சாயத்துகளையும் நகராட்சிகளாக மாற்றுவதா, இல்லையா என்னும் பிரேரணை அரசினரின் பரிசீலனை
9-00 a.m. யில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சார், ஏற்கனவே இது பற்றி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு நாளது வரையில் இது அமுலாக்கப்படவில்லை. கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு இருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு ஒன்றும் இல்லை. தர்மபுரி பஞ்சாயத்தையும் மற்றும் மூன்று பஞ்சாயத்துக்களையும் நகராட்சியாக மாற்றுவது பரிசீலனையில் இருக்கிறது.

Mr. SPEAKER : Questions are over.